ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

मन्निन्दया यदिपुनः परितोषमेति
नन्वप्रयत्नजनितोऽयमनुग्रहो मे ।
लोके हि धीरपुरुषाः परितुष्टिहेतोः
दुःखार्जितान्यपि धनानि परित्यजन्ति ॥

நம்மை நிந்தித்து ஒருவன் ஸந்தோஷப்படுவானேயாகில் அது நான் பிரயத்தினம் செய்யாமல் கிடைத்த அனுக்கிரஹமல்லவா ? உலகத்தில் நல்ல தீரர்களான புருஷர்கள் பிராணிகளின் ஸந்தோஷத்துக்காக துக்கப் பட்டுத் தேடிய பொருள்களையும் விட்டுவிடுகிறார்களல்லவா ?

உலகத்தில் பிராணிகள் பிரவர்த்திப்பதெல்லாம் சுகத்திற்காகவே. அவ்விதம் பிரயாஸைப்பட்டுக் கிடைத்த வஸ்துவைக்கொண்டு தான் ஸந்தோஷப்படுவதோடு பிறரையும் ஸந்தோஷப்படச்செய்வது ஸாதுக்களின் ஸகஜஸித்த ஸ்வபாவம். ஸொத்தைசிலவழித்தேப் பிறரை சந்தோஷப்படுத்தும் ஸ்வபாவமுள்ளவர்கள் ஸ்வல்பம் கூடச் சொத்துச் சிலவில்லாமல் வாய்க்கு வந்தபடிபேசி சந்தோஷப்படுவதையா மறுப்பார்கள். இதுதான் ஸனாதன தர்மிகளான ஸாதுக்களின் பெருமை. இதைத் தற்போது கண்கூடாகக் காணலாம். தேசமெங்கும் ஸனாதன தர்மிகளைக் கண்டபடி தூஷிக்காதவர் ஒருவருமில்லை. அவ்வளவையும்கேட்டு ஸாதுக்கள் மனதில் கொஞ்சமேனும் கிலேசத்தை அனுபவிப்பதில்லை. இத்தகைய உத்தம ஸ்வபாவம் தற்காலத்தியவர்களிடம் காண்பதே அரிது. ஸனாதன தர்மிகள் வாய்திறவாமல் இருக்கும்பொழுதே வலுவுச் சண்டைக்கு இழுப்பவர்கள் அவர்களது ஹிதத்தைச்சொல்வதற்காகவாவது வாயைத் திறந்துவிட்டால் அதை விபரீதமாக நினைத்துக்கொண்டு ஆத்திரப்பட்டு சீறிவிழுகிறார்கள் என்பது எங்கும் கண்ட விஷயம். அப்படியிருக்கையில் இவர்கள் வம்புக்கு இழுத்தால் விட்டுவிடப்போகிறார்களா? இப்படி ஆத்திரப்படுவதால் அவர்களுக்குப் பாபத்தைத்தவிற வேறு யாதொன்றுமில்லை. இத்தகைய தீயகுணத்தைத் தூர விலக்கி ஸனாதன தர்மிகள் கையாடிவந்த நற்குணங்களையே மேன்மையெனக் கருதி எல்லோரும் மேன்மை அடைந்து சுகித்திருப்பார்களாக. சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-௵ ஆடி-௴ கூ உ

ஸ்ரீ வியாஸ பூஜா வைபவம்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் இவ்வருஷத்திய வியாஸபூஜா ஸங்கல்பங்களை புக்கை என்னும் பஞ்சகங்காதீரத்தில் நடத்தவேணும் என்ற சிஷ்யகோடிகளுடைய பிரார்த்தனைக்கிணங்கி ஸங்கல்பித்த பிரகாரம், முதல்நாள் இரவே பூர்ணகும்பம் வாத்யகோஷம் வேதகோஷம் இவைகளுடன் க்ஷேத்திரவாஸிகளான மஹாஜனங்கள் எதிர்கொண்டழைக்க க்ஷேத்திரத்தை வலமாகவந்து சிவாலய தர்சனங்களைச் செய்துகொண்டு முன்னமே அலங்கரிக்கப்பட்டிருந்த அழகிய மண்டபத்தில் இரவு சுமார் $7\frac{1}{2}$ மணிக்கு விஜயமானார்கள்.

மறுநாள் ஆஷாட பௌர்ணிமையன்று அதிகாலையிலேயே தமது அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு 11 மணிக்கு பூஜா மண்டபம் வந்தார்கள். காஞ்சிபுரம். திருவானைக்காவல், ஆவுடையார்கோவில், மதுரை இத்யாதி தேவஸ்தானங்களிலிருந்து பிரஸாதங்கள் வந்தன. தஞ்சாவூர் பெரிய அரண்மனை, சின்ன அரண்மனை புதுக்கோட்டை, உடையார்பாளையம் முதலிய ஸமஸ்தானங்களிலிருந்து காணிக்கைகள் வந்தன. வியாஸ பூஜா கல்பப்பிரகாரம் வ்யஷ்டி பூஜைகளும் ஸமஷ்டி பூஜைகளும் ஸகல உபசாரங்களுடன் செவ்வனே நடத்தப்பட்டன. மதராஸ், அரக்கோணம், சித்தூர், வேலூர், முதலிய இடங்களிலிருந்து அநேக ஜனதனவான்களும் பண்டிதமணிகளும் ஆயிரக்கணக்காக வந்து குமிந்தனர். பக்தகோடிகள் பூஜாகிரமத்தை பக்தியுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அர்ச்சன நிவேதன தீபாராதனங்கள் நடந்தபிறகு பகவத்பாதாசார்யஸ்வாமிகள் அவர்களால் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்யப்பட்டது. அதை மஹாஜனங்கள் ஆதரவுடன் கைங்கர்யம் செய்வதாக அங்கீகரித்துக் கொண்டார்கள். அந்த ஸமயத்தில் வேறு இரண்டு யதிகளும்கூட இருந்தார்கள். பண்டிதமணிகளைக்கொண்டு ப்ரம்ம மீமாம்ஸை ப்ரதம

ஸூத்ரத்தில் ஸங்க்ரஹமாக வாக்யார்த்தம் சொல்லப்பட்டது. பிறகு தேவஸ்தானங்களிலிருந்தும் ராஜஸ்தானங்களிலிருந்தும் வந்தவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் பக்த மஹா ஜனங்களுக்கும் பிரஸாதங்கள் வழங்கப்பட்டன. இந்த புக்காக்ஷேத்திரத்தில் பக்தகோடிகள் எங்குபார்த்தாலும் வாக்யார்த்தங்களும் பஜனைகளும் நடத்தியதைப்பார்த்தால் ப்ரம்மலோகம் மாதிரி பிரகாசித்தது, சென்னையிலிருந்து திருப்புகழ் பஜனைக்கோஷ்டித்தலைவரான T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர் வகையருக்கள் வாத்யகோஷங்களுடன் உருக்கமாக பஜனைசெய்தார்கள். இவ்வாறு விசேஷ வைபவங்களுடன் வியாஸ பூஜை நடந்ததற்குப்பிறகு நித்தியபூஜை நடந்தது.

மறுதினம் புனப்பூஜை தீபாராதனை நடந்தபின் பண்டிதர்களால் வாக்யார்த்த விசாரங்கள் காலையிலும் மாலையிலும் விஸ்தாரமாக நடத்தப்பட்டன. மாலையில் தேவஸ்தானங்களிலிருந்தும் ராஜஸ்தானங்களிலிருந்தும் வந்திருந்தவர்களுக்கு வழக்கப்படி மரியாதைகளும்வியாஸாக்ஷத விபூதிபிரஸாதங்களும், மஹாஸ்வாமிகள் அவர்களால் அனுக்கிரஹிக்கப்பட்டன. சுற்றுப்பங்கங்களிலிருந்து கிராமாந்தர ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வந்து தர்சனம் செய்துகொண்டுபோகிறார்கள். ஆசார்யபாதாள் பஞ்சமுகமாய் விழும் அருவிகளில் ஸ்நானம்செய்து புனிதமான புண்ய தீர்த்தத்தை பக்தியுடன் சிரஸில் வஹித்துக்கொண்டுபோகிறார்கள். பஞ்சமர்களும் பக்தியுடன் வெகுதூரத்தில் நின்றுகொண்டு ஆசார்ய பாதாளின் திவ்ய கருணாமூர்த்தியை தர்சித்து அவர்களது கருணைநிரம்பிய திவ்யகடாக்ஷத்திற்கு பாத்திரமாகிறார்கள். இவ்வாறு ஸ்ரீ பகவத்பாதஸ்வாமிகள் புக்கா க்ஷேத்திரத்தில் இரண்டுமாதகாலம் வஸிப்பார்கள். வித்வத்ஸதஸ்ஸும் நடந்து வருகிறது. வித்வான்களும் வாக்யார்த்தங்கள் செய்து அனுக்கிரஹிக்கப்படுகிறார்கள். ஸகலஜனங்களும் ஒரேகூட்டமாக குமிழ்ந்து கொண்டு, ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜாதிகளை தர்சனம் செய்து கொர்ண்டு பக்தியுடன் ஸ்ரீ ஆசார்யாளுக்கு பணிவிடை செய்து வருகிறார்கள். இவர்களது பெருமையே பெருமை. இதுபோல் யாவரும் பக்தியுடன் ஸ்ரீ ஆசாரிய கைங்கர்யத்தில் ஈடுபட்டு ஐஹிகாமுஷ்மிக பலன்களை அடைவார்களாக. சுபம்.

V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

॥ प्राचीनाचार्यसंभावना लेखमाला ॥

பண்டைய ஆசார்ய ஸம்பாவனையின் எழுத்துமாலை.

ஆர்யர்களே! நமது குல பரம்பரையாக கல்யாண காலங்களில் ஸ்ரீமதாசார்யாளுக்கு செய்யப்பட்டுவரும் ஸம்பாவனையைப்பற்றின பண்டைய பத்திய கத்தியங்கள் அடங்கின ஏட்டுப் பிரதிகள் சில கிடைத்திருக்கின்றன. அவ்வாக்கியங்கள் ஸாஹித்தியரஸமும் பக்திப்பிரவாஹமும் அத்வைதாமிருதமும் நிரம்பித் ததும்பி தற்காலத்தியவர்களுக்கும் ஆசார்யாளின் பக்தியையும், ஸம்ஸ்கிருதமொழியின் பெருமையையும் படனமாத்திரத்திலேயே வெளியிடுகின்றன. அப்பிரதிகளில் கையொப்பமிட்ட மஹாநுபாவர்களின் பெயரைக் கவனிக்கும்போது நம்குலத்து முன்னோர்களின் ஸ்மரணத்தால் ஏற்படும் பெரும் பாக்கியமும் உதிக்கிறது.

மஹாராஜபுரம், கண்டராமாணிக்கம், அடயப்பலம், திருவிசைநல்லூர், திருவாலங்காடு முதலான கிராமவாஸிகளான, வேதகவி, ஸ்ரீயாவெங்கடேச்வரர், வைத்தியநாத தீக்ஷிதர், மார்க்கஸஹாய தீக்ஷிதர் முதலான மஹான்களின்பெயர் முதலானவை இந்த லிபியில் இருக்கின்றன. அவைகளை நாகரலிபியில் எழுதி அதன் பொருளை தூரான்வயமிருந்தாலும் உள்ளபடியே எழுதத்தொடங்குகிறேன். இம்மாதிரியான ப்ராசீனலேகமாலைகள் இன்னும் கிடைக்குமானால் ஆர்யதர்மத்தின் வாயிலாக வெளிப்படுத்தும்படி மற்ற மஹா ஜனங்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

ஷை லேகமாலைகள் சிற்சில இடங்களில் எழுத்துக்கள் செல்லரித்ததை விட்டுவிட்டும் எழுதுகிறேன்.

स्वस्ति श्रीमत्प्रशस्त प्रथितगुणमणि श्रेणिरत्नाकरेषु
स्वर्गङ्गोद्यत्तरङ्गप्रकरमदगलग्राहि वाग्गुम्भनेषु ।
स्वच्छन्दस्वान्तरङ्ग प्रतिनवकमला क्रीडवाटी विहार-
स्निग्धश्रीशैलकन्यासहचरकरुणासारवर्षार्द्रितेषु ॥

स्वाङ्घ्रि द्वन्द्वोपसेवोदित सकलकुलोद्दण्डपाण्डित्य कीर्ति-
 प्रौढान्तेवासिवर्गप्रकटितविजयस्तम्भदिङ्मण्डलेषु ।
जिह्वानानट्यमानाम्बुजभवतरुणीतुङ्गवक्षोजकुम्भ-
 क्रीडाहारायमाणामितविमलयशोधौतलोकत्रयेषु ॥

हृत्पङ्केरुहकेलिसौधविहरन्नीहारशैलाग्रणी-
 वंशौन्नत्ययशोविभूषितवपुस्सौभाग्यधन्योदयैः ।
कारुण्यामृतवीचिलालितभरैः काम्यैः कटाक्षाङ्कुरैः
 लीलाताण्डविताब्धिराजतनयालीलेषु सद्वेश्मसु ॥

चक्रोद्धारानुबद्ध ......कलाधीश सर्वस्वतन्त्र-
 श्रीकाञ्चीपीठिकाधीश्वरविदितयशःश्रीमदाचार्यवर्यात् ।
संलब्धाचार्य पीठत्रिभुवन गुरु साम्राज्य सिंहासनाढ्ये
 श्रीमच्चन्द्रावतंसाह्वय सद्दशताख्यापितोदारनाम्नि ॥

अचञ्चलाभक्तिगभीराचित्तेष्वाशान्तविश्रान्तयशोभरेषु ।
श्रीमन्महादेव सरस्वतीन्द्रेष्वद्वैतविद्याविधुतान्तरेषु ॥

महाराजपुराशेष विद्वज्जनकदम्बकैः ।
वैद्यनाथबुधोत्तंस प्रमुखैर्नतिशालिभिः ॥
पदाम्बुरुहयोर्भक्तिप्रह्वकल्पकशाखिनोः ।
विज्ञप्तयो विभाव्यन्ते विहतायुतवन्दनाः ॥

विकारिनामसंवत्सरे चैत्रशुद्धदशमी पर्यन्तस्य निर्व्याज-निखिलभूतोपब्रह्मयमाणानिरवधिकतरकरुणा सुधान्तरङ्गायमाणा-पाङ्गप्रतीक्षण निरीक्षणानुग्रहवशा ....करतल कमलः विलिखित प्रहित नारायणपत्रिका गंध प्रसादाः अहोबिलसोमया-ज्यानीतास्सांप्रतमस्माकमशेषाणामपि मौलिस्थलीरलंकुर्वन्त्यन-र्घा इव मकुटाः । अत्र श्रीचन्द्रमौलीश्वरस्य कल्याणादि महोत्सवेषु

अग्रसंभावना कर्तव्येति अतियत्नलब्ध मार्जारानुग्रहं मूर्ध्ना दधानाः शुभशोभनाद्युत्सवेषु तथैवानुतिष्टन्तो वर्तामहे ।

वेनुगोण्ड नरहरिसोमयाजिसंमतिः ।
कण्डरमाणिक्यं वैद्यनाथ संमतिः ।
कोमल् रामनाथ शास्त्रिसंमतिः ।
अदंवार् वेङ्कटेश्वरशास्त्रिसंमतिः ।
श्रीनिवास शास्त्रिसंमतिः ।
नीलकण्ठ शास्त्रिसंमतिः ।
विद्या विलास अन्नातिरुलदीक्षित संमतिः ।
रामकृष्णशास्त्रिसंमतिः ।
अडयप्पलं अण्णाशास्त्रि संमतिः ।
चङ्गोपाल शास्त्रि संमतिः ।
राजगोपाल शास्त्रि संमतिः ।
स्वामिदीक्षित संमतिः ।

अप्पय्ययज्वावलिशेखराणां नप्ता महामार्गसहाययज्वा ।
तत्पुत्रवर्यो हरिशङ्कराख्यो वसन्महाराजपुराग्रहारे ॥
श्रीमन्महादेवयोगीन्द्रमहिताज्ञाधुरंधरः ।
स्वामिनां करुणापाङ्ग सङ्गमर्थयते सदा ॥

மஹாராஜபுரம்.

க்ஷேமம்- அழகுவாய்ந்தவைகளும் சிறந்தவைகளும் கீர்த்தி பெற்றவைகளுமான குணரத்தினங்களின் வரிசைக்கு ரத்னாகரங்களாயும், ஆகாய கங்கையில் மோதுகின்ற அலைக் கூட்டத்தின் அஹங்காரத்தைப் போக்குகின்ற வாக்குப்பணத்தையுடையவைகளும், தனக்கதீனமான மனத்தாகிற புதிய அழகிய உத்தியான வனத்தில் பிரியமுள்ள பார்வதீ நேசனின் கருணைவள்ளலுள்ள

வைகளும், தனது இரு திருத்தாளை சேவிப்பதால் உண்டான ஸகல கலைகளின் அபாரமான பாண்டித்தியப்பெற்ற மேம்பட்ட சிடர்களின் ஸமூஹத்தால் பிரகடனம் செய்யப்பட்ட ஜயத்தூண்களோடு கூடின திசைமண்டலத்தையுடையவைகளும், நாக்கில் மிகவும் நடனம் புரிகின்ற கலைமகளின் உன்னதங்களான கலசங்கள் போன்ற பயோதரங்களின் க்ரீடாஹாரம்போன்ற அளவிலாத பரிசுத்தமான கீர்த்தியால் அலம்பப்பட்ட மூவுலகையுடையவைகளும், ஹிருதய கமலமாகிற விளையாட்டு உப்பரிகையில் விஹாரஞ்செய்கின்ற சூரியசந்திர வம்சங்கள்போன்ற வம்சத்தின் மேன்மையாலாகிய கீர்த்தியால் அலங்கரிக்கப்பட்ட சரீர சௌபாக்கியத்திற்குத் தன்யதையைத் தருகின்றவையும், கருணாமிருததரங்கங்களால்கொண்டாடப்பட்டபேன்மையையுடையவைகளும் இஷ்டத்தை அளிக்கின்றவைகளுமான கடாக்ஷாங்குரங்களால் லீலாதாண்டவமாடுகிற லக்ஷ்மீவிலாஸத்தையுடையவைகளுமான ஸாதுக்களின் கிருஹங்களில் ஸ்ரீகாஞ்சீ பீடாதிபதிகளால் தெரியப்படுத்தப்பட்ட கீர்த்தியைடைய ஆச்சார்ய ச்ரேஷ்டரிடம் இருந்து அடையப்பட்ட ஆச்சார்ய பீடத்தையுடைய மூவிலகின் குருவின் ஸாம்ராஜ்ய சிம்மாஸனத்தால் விளங்குகின்றவர்களாயும் சந்திராவதம்ஸர் என்ற பெயருக்கிணங்கின உதாரமான அன்வர்த்தநாமாவுள்ளவர்களுமான சந்திரசேகரஸரஸ்வதீஸ்வாமிகளிடத்தில், அசைவற்ற கம்பீரமான மனதுள்ளவர்களும், திசைக்கோடியில் பாவினகீர்த்திவாய்ந்தவர்களும், அத்வைத வித்தையால் பரிசுத்தமான ஹிருதயமுள்ளவர்களுமான ஸ்ரீமஹாதேவஸரஸ்வதிந்திரர்களிடம் வைத்யநாதர் முதலான வணக்கமுள்ள மஹாராஜபுரத்திலுள்ள ஸகலவித்வஜ்ஜனங்களால் பக்தியால் வணங்குகின்றவர்களுக்கு கற்பகதருபோன்ற சரணகமலங்களில் அனேக ஆயிரம் வந்தனத்தோடு விக்ஞாபனங்கள் செய்யப்படுகின்றன.

விகாரி ஸம்வத்ஸரத்தில் சைத்திரசுத்த தசமியில்........... அஹோபில ஸோமயாஜியால் கொண்டுவரப் பட்டவைகளும், வியாஜமில்லாமலே ஸகல பிராணிகளிடம் தழைத்தோங்கும் எல்லையில்லாத கருணாமிருதாந்தரங்கம் போன்ற அபாங்கங்களின் ஈசுவராநுக்கிரஹத்திற்கு வசங்களும்......கரதல கமலத்தால் எழுதப்பெற்று அனுப்பப்பட்ட நாராயணஸ்மிருதி பத்திரிகாவாஸனையோடு கூடினவைகளுமான பிரஸாதங்கள் இப்பொழுது எங்கள்

எல்லோருடைய உத்தமாங்கங்களையும் விலை மதிக்கப்பெறுமகுடங்கள்போல் அலங்கரிக்கின்றன.

ஸ்ரீ சந்திரமௌளீச்வரருக்கு, கல்யாணம் முதலான மகோத்ஸவங்களில் அக்கிர ஸம்பாவனை செய்யவேண்டுமென்ற விடா முயற்சியால் * ஏற்பட்ட மார்ஜ்ஜாரானுக்கிரஹத்தை சிரஸால் வஹித்துக்கொண்டு சுபசோபனாதி உத்ஸவங்களில் அப்படியே அனுஷ்டித்துக்கொண்டு இருக்கின்றோம்- ஒப்பந்தம். வேனு கொண்டா நாஹரிஸோமயாஜி ஸம்மதி, கண்டாமாணிக்கம் வைத்தியநாத ஸம்மதி. இன்னும் அனேக சம்மதிகள் கையெழுத்திடப் பட்டிருக்கின்றன. பிறகு — அப்பய்ய தீக்ஷிதாளின் பேரன் மார்க்க ஸஹாயதீக்ஷிதர் அவருடைய பிள்ளை சங்கார் என்பவர் மஹாராஜபுர அக்கிரஹாரத்தில் வஸித்துக்கொண்டு மஹாதேவயோகீந்திராளின் கௌரவமான ஆக்ஞையை வஹித்து எப்போதும் ஸ்வாமிகளின் கருணாகடாக்ஷ ஸம்பந்தத்தை வேண்டுகிறார்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

*क्वचित्कृता कृताकापि मार्जारीभक्तिरित्युच्यते। எலியைப் பிடிக்கும் ஸமயத்தில் பூனை எப்படி மனதை அசைவற்றதாகச் செய்கிறதோ அப்படி ஏகாக்ரமான பக்தியைச் செலுத்தினால் அதை மார்ஜார பக்தி என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

நாரீ தீர்த்தம்.

1. கிருஷ்ணர் சொற்படி பாண்டவரிடம் நாரதர் வந்தார் திரௌபதி ஒரு வருஷம் ஒருவருக்குப் பத்நீ. அப்போது ஏகாந்தமாக இருக்கும் தம்பதிகளை எவரும் பார்க்கக்கூடாது. பார்த்தால் பனிரண்டுமாதம் தீர்த்தயாத்திரை செல்லவேண்டும் என்று உபதேசித்தார். பாண்டவரும் அப்படியேயநுஷ்டித்தனர்.

2. ஒருநாள் ஓர் பிராமணன் அரண்மனை வாசலில் வந்தான். என் பசுக்களைத் திருடன் கொண்டுபோய்விட்டான். அரசன் கவனிக்கவில்லையே! என்று கத்தினார். அர்ஜுனன் தநுஸை எடுக்க உள்ளேசென்றான். தர்மரும் திரௌபதியுமங்கிருந்தனர். கண்ணைத் துணியால் கட்டிக்கொண்டே வில்லை எடுத்தான். அவரை வணங்கி உத்திரவுபெற்றான்.

3. திருடரை அடித்துப் பசுக்களை மீட்டுவந்தான். நாரதர் சொற்படி தீர்த்தயாத்ரைக்குச்சென்றான். கங்கையில் முழுகினான். உலூபி என்ற நாகப்பெண் அவனைப் பாதாளத்திற்கழைத்து சென்றது. இவ்விருவருக்கும் இராவான் என்ற பிள்ளைபிறந்தது. மணலூருக்குவந்தான். சித்ராங்கதை என்னும் ராஜகன்யகையை மணந்தான்.

4. பலநதிகளுக்குச் சென்று ஸ்நாநம்செய்தான். பூதானம் செய்தான். தெற்கு ஸமுத்ரக்கரைக்குப் போனான். அங்கு அகஸ்த்ய ஸௌபத்ர பௌலோம காரந்தம பாத்வாஜ தீர்த்தமெனும் ஐந்து தீர்த்தங்களைக்கண்டான். அவைகளில் எவரும் ஸ்நாநம் செய்வதில்லை. ஏன்? அங்கு முதலைகள் ஸ்நாநம்செய்வோரைப் பிடித்துக்கொள்கின்றன.

5. அர்ஜுனன் துணிந்து முதல் தீர்த்தத்தில் இறங்கினான். அவன் காலை ஓர் முதலை பிடித்துக்கொண்டது. அதை அவன் இழுத்துக் கரையில் போட்டான். உடனே அது அழகான அப்ஸரஸாக ஆனது. நீ யார் என்று அவன் கேட்டான். யான் வர்க்கை எனும் அப்ஸரஸ். எனக்கு தோழிகள் நால்வரிருக்கின்றனர். ஸளரபேயீ, ஸமீசீ, பத்புதை, லதை, என்பது அவர்கள் பெயர்.

6. நாங்கள்ஐவரும் குபேரன்ஸபைக்குச்சென்றோம். வழியில் ஓர் பிராமணரைக்கண்டோம். அவர் மஹா தபஸ்வீ. ஸூர்யனைப் போல் விளங்கினார். அவரருகேசென்றோம். எங்களது லீலைகளால் அவரை வசப்படுத்த முயற்சித்தோம். முடியவில்லை தவத்தைக் கலைத்ததால் அவருக்குக் கோபம்வந்தது.

7. நீங்கள் முதலையாகப் போவீர்கள் என்று சபித்தார். அவர் காலில்விழுந்தோம். மன்னிக்கும்படி வேண்டினோம். எல்

லோரிடமும் அன்புகாட்டுவதே பிராமணதர்மம்! எங்கள் சாபத்தை அகற்றுங்கள் என்றோம். கருணாமூர்த்தியான அவர் மநம் இளகியது. நூறுவருஷம் முதலையாயிருங்கள்! ஓர் மஹா புருஷன் உங்களை விடுவிப்பான் என்றார்.

8. எங்கு செல்வது? யார் அம் மஹாபுருஷன்? எப்போது வருவான்? என்று கஷ்டமடைந்தோம். தற்செயலாக நாரதர் அங்குவந்தார். அவரை வணங்கி வேண்டினோம். அவரே இந்த தீர்த்தங்களுக்கு அனுப்பினார். பாண்டவ மத்யமன் அர்ஜுநன் இங்குவருவான். அவன் மஹா புருஷன்.

9. உங்கள் சாபத்தை அகற்றுவான் என்றார். அதேபோல் தாங்கள் வந்தீர். என் சாபமகன்றது. எனது தோழிகளையும் சாபத்திலிருந்து விடுவியுங்கள் என்றாள். அர்ஜுநன் மற்ற நாலு தீர்த்தங்களிலும் இறங்கினான். முன்போலவே முதலைகள் காலைப் பிடித்தன. அவன் அவைகளைக் கரை எற்றினான். அவர்கள் சாபமுமகன்றது.

10. ஐந்து அப்ஸரஸுகளும் அர்ஜுநனை வணங்கினர். அவனைப் போற்றி விடைபெற்றனர். முதலை பயமகன்றதால் முனிவர்கள் அங்கு ஸ்நாநம் செய்தனர். அவர்களும் அர்ஜுநனைப்போற்றினர். கர்வததால் அப்ஸரஸுகளுக்குக் கஷ்டம் நேர்ந்தது. பரோப காரத்தால் பார்த்தனுக்குப் பெருமைவந்தது. அந்த தீர்த்தங் களுக்கு நாரீ தீர்த்தம் என்று பெயர்வந்தது.

வெ. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

முயற்சித்திருக்கலாம். 11வ சாரதாசட்டப்படி ஓர் சிதம்பரம் வக்கீலுக்கு 10ரூ. அபராதம் விதிக்கப்பட்டது. இதை விசாரித்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இது விஷயமாக மஹாராணியின் சாஸநம் இந்திய சட்டசபை சீர்திருத்தம் பார்லிமெண்ட் சட்டம் முதலிய

விஷயங்கள் வாதத்திற்கு வருமென எதிர்பார்த்து ஏமார்ந்ததாகத் தெரிகிறது. இவ்விஷயத்தை எதிரியான வக்கீல் வர்புறுத்தாத காரணமென்னவோ? வங்காள ப்ரபல வக்கீலான நரேந்த்ர நாத் ஸேட் என்பார் இதுபோன்ற கேஸில்தான் ஊதியம் பெறுமல் சீமை கோர்ட்வரை வாதாடுவதாகக்கூறுகிறார். நம்மாகாண வக்கீல்கள் இதை நன்கு வாதித்திருக்கலாம்.

ஸத்விஷயம். சென்னை திருவல்லிக்கேணி உத்திராதிமடத்தில் திருவநந்தபுரம் ஸநாதநதர்ம காமதேநு எனும் பத்திரிகையின் ஆசிரியர் பாகவதம் தசமஸ்கந்த உபன்யாஸத்தைப் பூர்த்தி செய்து கீதையையும் உபந்யஸிக்கிறார். 10வ குண்ணூரில் கோவை நீலகண்ட சாஸ்திரிகளவர்கள் ஓர் அழகிய காலக்ஷேபம்செய்தார். 12வ காரைக்கால் வைஷ்ணவ ஸமாஜத்தில் பல மத உபன்யாஸங் நடந்தன.

ஓர் வைத்யரின் பக்தி. 12வ தஞ்சை டாக்டர் ஒருவர் கும்பகோணம் நாகேஸ்வரஸ்வாமிகோவில் அம்பாளுககு 400ரூ: பெரும் ஓர் திரு ஆபரணத்தை அளித்து அன்று அம்பிகைக்கு அபிஷேகாதிகளைச் செய்துவைத்ததாகத் தெரிகிறது. ஆங்கிலக் கல்வியே ஆஸ்திகத்தை அபஹரிப்பது,அதிலும் வைத்யத்தொழில் விசேஷமானது. சைவபக்தரான இந்த வைத்யருக்கு ஒரு மஹா வைத்யரான பகவான் ஸம்ஸாரநோயை அகற்றுவர் போலும்!

மஹா கும்பாபிஷேகம். 7வ சேலம் ஆத்துரைச்சார்ந்த கங்கைமாநகரில் சிவன்கோவில் விஷ்ணுகோவில் கிராமதேவதை ஆலயம் முதலியவைகளுக்குத் திருப்பணி நடந்து மிக விமர்சையாகக் கும்பாபிஷேகம் செய்தனர். இப்பெரும் புண்யகர்மத்தில் ஈடுபட்ட தார்மிகர்கள் வாழ்க.

மஹாக்நிசயநம். 14வ காஞ்சிக்கடுத்த கொளத்தூர் அக்ரஹாரத்தில் பிரும்மஸ்ரீ கந்தாடை ராமஸ்வாமி தீக்ஷிதர்வாள் ஷி யாகத்தைச்செய்து அவபிருதம்செய்தார். இவர் ச்ரௌத வேத சாஸ்திரக்ஞாநம் நிறைந்த சிஷ்டர். ச்ரத்தை என்ற தநத்தைக் கொண்டு ஷி மஹா யாகத்தைத் துவக்கிவிட்டார். உள்ளூரில் பலப்ரதிபந்தகங்களிருந்தும் யக்ஞேசனது அருளால் யாகம் செவ்வனே பூர்த்தியானது. அபிநவவ்யாஸ பிரும்மஸ்ரீ ச்வேதாரண்யம நாராயணபஜ்வா அவர்கள் யாகசாலையில் மிக உருக்கமாக

உபந்யாஸம் செய்தார். எண்ணிறந்த பிராமண ஸமூஹம் கூடி இருந்தது. சிறப்பாக அன்னதானம் நடந்தது.

நூறுகோடி ராமஜபம். 17௳ துவக்கி 49 நாள் சென்னையில் வடதேசத்து பக்தர்கள் ஏழு ஸப்தாஹத்தைச் சேர்ந்தாப்போல் நடத்தி பலருடைய ஸஹாயத்தைக்கொண்டு சதகோடி ராமஜபம் செய்யத் தீர்மானித்து நடத்துகின்றனர். அவர்கள் செய்யும் அகண்டபஜனையும் பக்திநிறைந்த மற்ற பூஜா உபசாரங்களும் நாஸ்திகனை ஆஸ்திகனுக்கும்.

ஓர் அரசன் அறியாமல் பிரும்மஹத்தி செய்துவிட்டு ப்ராயச்சித்தம் கேட்டான். ஓர் ரிஷிகுமாரர் மும்முறை ராமநாமாவை ஜபி என்றாராம். அவனது பிதா அதைக்கேட்டு கோபங்கொண்டு ஒருமுறை சொன்னாலே ஸகலபாபமும் போகுமே. நீ அவநம்பிக்கைகொண்டன்றோ மும்முறைச் சொல்லச் சொன்னாய். ஆதலால் நீ நீசனாவாய் என்று சபித்தாராம். அந்த முனிகுமாரனே குஹனாகவந்தான் என்று ஓர் கதைஉண்டு. சதகோடி ராமநாம ஜபத்தால் உலகக்ஷேமமுண்டாகும்.

ஸப்தாஹபூர்த்தி. 17௳ சென்னை திருவல்லிக்கேணியில் பிரும்மஸ்ரீ லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகள் நடத்திய ஸப்தாஹம் பூர்த்தியானது. பலகோடி பக்தர்களுக்குசெவிக்கும் வயிற்றிற்கும் ஷட்ரஸோபேதமான விருந்தளிக்கப்பட்டது. தாராஹோமம் அவபிருதம் முதலியவைகள் ச்ரௌதச்சாயையை ஒத்திருந்தது. ஷை சாஸ்திரிகளைக் கொண்டாடாதவரில்லை.

வே. ஸோமதேவ சர்மா.

1 2 3 4 5 6 7 8 9 10

HIS HIGHNESS, THE JUNGPON AND PARTY AT TAKLAKOT

1. The Jungpon's little servant
2. Mr. Prathap Singh, Tahsildar
3. Major S. Gopal Rao
4. Mr. N. Rangachar
5. Tibetan officer
6. Nandaram Singh, merchant of Garbyang, our guide
7. His Highness The Maharaja
8. The Jungpon's daughter
9. The Jungpon
10. Kumar Khadga Singh Pal

CHAPRASSI NARAYAN DUTH (X), OUR GUIDE